بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/12/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# போர் மற்றும் படையெடுப்புகள் ஆகியவற்றின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றும் சில படையெடுப்புகள் பற்றி எடுத்துக் கூறுவேன். ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் படையெடுப்பு என்று அழைக்கப்பட்ட ஒரு போரைப் பற்றி வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது. இந்த போர் ஜமாதில் ஆகிரா, ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு பனூ ஜுஸாம் (بنو جذام) கோத்திரத்துடன் ஹிஸ்மா எனும் நகரத்தில் நிகழ்ந்தது. இது மதீனாவில் இருந்து 8 இரவு பயண தொலைவில் இருந்தது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: இந்த போர் நிகழ்ந்த காலத்தைப் பற்றி ஒரு சிக்கல் உள்ளது. அதைப் பற்றி எடுத்துரைப்பது அவசியமாகும். இப்னு சஅது மற்றும் அவர்களை பின்பற்றி மற்ற வரலாற்று ஆசிரியர்கள் இந்த போர் நிகழ்ந்த காலமாக ஜமாதில் ஆகிரா 6 ஹிஜ்ரீ என்று எழுதியிருக்கிறார்கள். இதுவே சரியானது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அல்லாமா இப்னு கய்யிம் அவர்கள் ஸாதுல் மஆது என்ற நூலில் விளக்கமளிக்கும் போது, இந்த போர் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு நிகழ்ந்ததாகும் என்று எழுதியிருக்கிறார்கள். அநேகமாக இப்னு கய்யிம் அவர்களின் கூற்றின் அடிப்படையில் இந்த போருக்கான காரணம், திஹ்யா கல்பீ (دحیہ کلبی) என்பவர் கைஸர் மன்னரை சந்தித்து விட்டு மதீனாவிற்கு திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் பனூ ஜுஸாம் கோத்திரத்தினர் அவரிடம் கொள்ளை அடித்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் திஹ்யா கல்பீ ஐ கைஸர் மன்னருக்கு கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தது ஹுதைபியா சமாதானத்திற்குப் பிறகு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் ஆகும். ஆகவே இந்த சம்பவம் எவ்வகையிலும் ஹுதைபியா சமாதானத்திற்கு முன்பு நிகழ்ந்திருக்க முடியாது. இந்த சான்று தம்மை பொறுத்தவரை முற்றிலும் தெளிவானதாகவும், வெளிப்படையானதாகவும் உள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது இப்னு சஅது அவர்களின் அறிவிப்பு நிச்சயமாக மறுக்க தகுந்ததாக ஆகிவிடுகிறது. ஆனால் இந்த எளியவனுடைய கருத்து என்னவென்றால், இன்னொரு காரணம் உள்ளது. அதை அல்லாமா இப்னு கய்யிம் அவர்கள் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டார்கள். அது என்னவென்றால், கைஸர் மன்னரை சந்திப்பதற்காக திஹ்யா கல்பீ சிரியாவுக்கு இருமுறை சென்றிருக்கவும் வாய்ப்பு உள்ளது. அதாவது ஹுதைபியா சமாதானத்திற்கு முன்பு வியாபார நோக்கத்திற்காக முதல் முறையாக சென்றிருக்கலாம். அப்பொழுது கைஸர்

மன்னரையும் சந்தித்திருக்கலாம். இரண்டாவது முறையாக ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை கொண்டு சென்றிருக்கலாம்.

பின்வரும் விஷயமும் இந்த காரணத்திற்கு வலு சேர்க்கின்றது. அது என்னவென்றால், அந்த பயணத்தில் திஹ்யா கல்பீ அவர்களிடம் வியாபார பொருட்கள் இருந்தன என்று இப்னு இஸ்ஹாக் எழுதியிருக்கிறார்கள். ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகுள்ள பயணத்தில் வியாபார பொருட்களை எடுத்துச் செல்வது எவ்வகையிலும் சம்பந்தப்பட்டதாக தெரியவில்லை. இன்னொரு விஷயத்திற்கும் வாய்ப்புள்ளது. அது என்னவென்றால், திஹ்யா கல்பீ அவர்களின் இப்பயணம் வியாபார நோக்கத்திற்காக மட்டுமே இருந்திருக்கலாம். ஆனால் இப்னு சஅது அவர்களின் அறிவிப்பாளர் திஹ்யா கல்பீ அவர்களின் இன்னொரு பயணத்துடன் இந்த பயணத்தை கலந்து கைஸரை சந்தித்தது, ஆடை பரிசாக கிடைத்தது ஆகியவற்றை அனுமானமாக இணைத்திருக்கவும் வாய்ப்புள்ளது! அல்லாஹ்வே நன்கறிவான்.

பிறகு, **அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் படையெடுப்பைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.** இந்த படையெடுப்பு ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு தூமத்துல் ஜந்தல் எனுமிடத்தை நோக்கி செய்யப்பட்டது. இதன் விபரத்தை **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதி இருக்கிறார்கள்:**

இந்த படையெடுப்புக்கான ஆயத்தம் குறித்தும், (அதற்காக) புறப்பட்டதைக் குறித்தும் **இப்னு இஸ்ஹாக் அவர்கள் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமிருந்து ஒரு சுவாரசியமான அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள்:** “ஒரு முறை எங்களுள் சிலர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அமர்ந்திருந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலீ (ரலி) மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். அன்சாரி இளைஞர் ஒருவர் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நம்பிக்கை கொண்டவர்களில் அனைவரையும் விட சிறந்தவர் யார் என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நற்பண்புகளில் எவர் அனைவரையும் விட சிறந்தவராக இருப்பாரோ அவரே ஆவார் என்று கூறினார்கள். அனைவரையும் விட அதிக இறையச்சம் கொண்டவர் யார் என்று அந்த இளைஞர் கேட்டார். எவர் மரணத்தை அதிகமாக நினைவு கூர்கிறாரோ, அதற்காக முன்பே ஆயத்தமாகிறாரோ” என்று அன்னார் கூறினார்கள்.

ஆயத்தம் என்பது என்னவென்றால், அல்லாஹ்வின் அச்சம் இருக்க வேண்டும்; அவனுடைய உரிமையை செலுத்த வேண்டும்; அவனுடைய கட்டளைகளின் படி செயல்பட வேண்டும். இதுதான் மரணத்திற்காக ஆயத்தமாகுதல் ஆகும்.

“அப்போது அந்த அன்சாரி இளைஞர் மவுனமாகிவிட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் எங்கள் பக்கம் திரும்பி, முஹாஜிர்களின் கூட்டமே! ஐந்து தீமைகள் எவ்வாறானவை என்றால் அவை என் சமுதாயத்தில் ஒருபோதும் உருவாகி விடக்கூடாது என்று நான் இறைவனிடம் பாதுகாப்பு தேடுகிறேன். ஏன் என்றால் அது எந்த சமுதாயத்தில் தோன்றுமோ அந்த சமுதாயத்தை அழித்து நாசம் செய்து விடும்.

முதல் விஷயம் என்னவென்றால், எந்தவொரு சமுதாயமும் விபச்சாரம் மற்றும் வெட்கக்கேடான செயல்களை பகிரங்கமாக செய்யாத வரை அவர்களுக்கு

முன்பிருந்த மக்களிடம் இல்லாத நோய்களும் தொற்று நோய்களும் அவர்களிடத்தில் வெளிப்பட ஆரம்பிக்காது.”

தற்காலத்தில் இதை நாம் உலகில் பொதுவாக காண்கிறோம். பெருமானார் (ஸல்) அவர்கள் இதிலிருந்து பாதுகாப்பு வேண்டியுள்ளார்கள். முஸ்லிம்கள் குறிப்பாக இதன்பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

“இரண்டாவது விஷயம், எந்த ஒரு சமுதாயமும் அளந்து கொடுப்பதிலும் நிறுத்து கொடுப்பதிலும் மோசடி செய்யாதவரை அந்த சமுதாயத்தில் பஞ்சமும், ஓயாத உழைப்பும், கடுமையும், அரசனின் கொடுமையும் இறங்க ஆரம்பிக்காது.”

இதன் பக்கமும் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இந்த மோசடியும் முஸ்லிம்களிடத்தில் அதிகமாக பரவி விட்டது. அந்தோ! அவர்கள் இதை புரிய வேண்டுமே! அஹ்மதிகள் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

“மூன்றாவது விஷயம், எந்த ஒரு சமுதாயமும் ஸகாத் மற்றும் சதக்கா செலுத்துவதில் சோம்பேறித்தனத்தையும் கவனமின்மையும் வெளிப்படுத்தாதவரை அவர்களிடம் மழை வளம் குறைவதில்லை. எந்த அளவுக்கென்றால் இறைவனுக்கு தன்னுடைய படைப்பினமான கால்நடைகள் மற்றும் விலங்குகளைப் பற்றி அக்கறை இல்லாதிருக்கும் என்றால் அவ்வாறான சமுதாயத்தின் மேல் மழை பெய்வதை முற்றிலும் நிறுத்தி இருப்பான்.”

இதுவும் அல்லாஹ்வுடைய தண்டனையின் அடையாளமாகும். இதிலிருந்தும் பாதுகாப்பு தேட வேண்டும். “நீங்களும் பாதுகாப்பு தேடுங்கள்; நானும் பாதுகாப்பு தேடுகிறேன்” என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“நான்காவது விஷயம், இறைவன் மற்றும் அவனுடைய தூதரிடம் செய்து கொண்ட உறுதிமொழியை மீறாத வரை எந்த ஒரு சமுதாயத்தின் மீதும் அந்நிய சமுதாயத்தைச் சேர்ந்த எதிரிகளால் ஆதிக்கம் செலுத்த முடியாது. அந்த எதிரிகள் அவர்களின் உரிமைகளை பறித்து விடுவார்கள்.”

தற்காலத்தில் முஸ்லிம்களுடைய நிலையைப் பார்க்கும் போது அவர்கள் தம் ஒப்பந்தங்களை முறிக்கிறார்கள் என்பது அதிலிருந்து வெளிப்படுகின்றது. அல்லாஹ் கருணை காட்டுவானாக! அவர்களுக்கு அறிவை வழங்குவானாக.

“ஐந்தாவது விஷயம், எந்த ஒரு சமுதாயத்தின் ஆலிம்களும் தலைவர்களும் ஷரீஅத்திற்கு மாற்றமாக மார்க்கத் தீர்ப்பு கொடுத்து ஷரீஅத்தை தம் விருப்பத்திற்கு ஏற்ப சீர்குலைக்காத வரை அவர்களிடத்தில் உட்பூசல்களும் சண்டைகளும் ஆரம்பிக்காது” என்று கூறினார்கள்.

இதுவும் முஸ்லிம்களிடத்தில் தற்போது பிரிவினைவாதமாக பொதுவாக தென்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த விஷயங்களில் இருந்து பாதுகாப்பு கேட்டார்களோ அதுவே தற்போது முஸ்லிம்களிடத்தில் நமக்கு தென்படுகிறது. அல்லாஹ் கருணை காட்டுவானாக! சமுதாயங்களின் முன்னேற்றம் மற்றும் வீழ்ச்சி ஆகியவற்றிற்கான காரணத்தைக் குறித்து அன்னார் வழங்கிய பொன்னான அறிவுரையாக இது உள்ளது. முஸ்லிம்கள் விரும்பினால் அவர்களுக்கு இது தற்காலத்திலும் சிறந்த பாடமாக இருப்பது தெரியவரும். அந்தோ! முஸ்லிம்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டுமே!

பிறகு **ஹஸ்ரத் அபீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களின் படையெடுப்பு பற்றிய குறிப்பு காணப்படுகிறது.** ஃபதக் (فدك) என்ற இடத்தை நோக்கி அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இந்த போர் ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில்

நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை 100 வீரர்களுடன் ஃபதக் என்ற இடத்தில் இருந்த பனூ சஅது பின் பக்ர் என்ற கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் கைபர் போரின் போது இப்பகுதி போரின்றி வெற்றி கொள்ளப்பட்டது.

பிறகு, **ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் படையெடுப்பு பற்றிய குறிப்பு வருகிறது.** பனூ ஃபஸாரா (بنو فزاره) -வுக்கெதிராக அந்த நடவடிக்கை இருந்தது. இது ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு நிகழ்ந்தது. பனூ ஃபஸாரா எனும் கோத்திரம் நஜத் பகுதியில் வாதியல் குரா எனுமிடத்தில் குடியிருந்தது. தபக்காத்துல் குப்ராவிலும், சீரத் இப்னு ஹிஷாமிலும், ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் இந்த படைப்பிரிவு அனுப்பப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இந்த போருக்கு அமீராக நியமித்தார்கள் என்று ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் அபூதாவூதில் இருந்து தெரிய வருகின்றது.

இந்தப் போரில் முஸ்லிம்களின் முழக்கம் اَمِتْ اَمِتْ அதாவது, ‘அல்லாஹ்வே எதிரியை கொல்வாயாக’ என்பதாக இருந்தது.

ஹஸ்ரத் ஸலமா பின் அக்வஃ (اكوع) (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் அந்நாளில் என் கைகளால் ஏழு நபர்களை கொன்றேன். இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் 9 நபர்களைக் கொன்றதாக வருகிறது.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மூன்று மர்ஹூம்களைப் பற்றிய விரிவான நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.*

**முதல் குறிப்பு, காதியானுடைய தர்வேஷ் மதிப்பிற்குரிய தய்யுப் அஹ்மத் சாஹிப் பங்காளி அவர்களுடையதாகும்.** டிசம்பர் 11 அன்று 97 வயதில் அவர்கள் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

பங்களாதேஷில் இவர்கள் பிறந்தார்கள். 1942 ல் டாக்காவில் இவர்கள் முறையாக பைஅத் படிவம் நிரப்பி அஹ்மதிய்யத்தில் இணையக் கூடிய நல்வாய்ப்பை பெற்றார்கள். 1945 இல் முதல் முறையாக காதியான் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களை சந்திக்க கூடிய நற்பேறை பெற்றார்கள். உள்ளத்தில் காதியான் மீது எந்த அளவு நேசம் உருவானது என்றால், பிறகு தம் நாட்டுக்கு இவர்கள் திரும்பிச் செல்லவில்லை. இவர்கள் இரு வருடம் கிராம முபல்லிக்களுக்கான சிறப்பு வகுப்பில் கல்வி கற்றார்கள். அந்த காலகட்டத்தில் 1947 இல் நாடு பிரிக்கப்பட்டது. இவர்கள் காதியானிலேயே இருக்க விண்ணப்பம் வைத்த போது அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. தர்வேஷிய காலகட்டத்தில் பல்வேறு இடங்களில் பாதுகாப்பு பணிகளை செய்யக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு அலுவலகங்களில் பல்வேறு தொண்டுகளை ஆற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. 1955, 56 களில் ஜமாஅத்தின் பொருளாதார நிலை மிகவும் பலவீனமாக இருந்தது. எந்த தர்வேஷ்கள் வேலை செய்து தம் வருமானத்தை உருவாக்க முடியுமோ அவர்கள் ஏதேனும் வேலையே தேடிக் கொள்ள வேண்டும்; ஏனென்றால் ஜமாஅத் allowance கொடுக்க இயலாது; தற்போது அவர்களுடைய பொருளாதார சுமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் இவ்வாறு அறிவிப்பு செய்தது.

இந்த வழிகாட்டலின் ஒளியில் இவர்கள் தாருல் மஸீஹுக்கு வெளியே கடைவீதியில் ஒரு தேநீர் கடையை திறந்தார்கள். பெரும்பாலும் விருந்தினர்களுக்கும், ஏழை மக்களுக்கும் இலவசமாகவே தேநீர் கொடுத்து வந்தார்கள்.

இவர்களின் திருமணம் கேரளாவைச் சார்ந்த தலாக் கொடுக்கப்பட்டிருந்த ஆமினா சாஹிபா என்ற ஒரு பெண்ணுடன் நடந்தது. அவர்களுக்கு (முதல் கணவர் மூலமாக) ஏற்கனவே ஒரு மகள் இருந்தாள். அந்த மகளை இவர்கள் வளர்த்தார்கள்.

மர்ஹூமுக்கு கொஞ்ச காலத்திற்கு முன்பு கால் மூட்டுகளில் கடுமையான வலி ஏற்பட்டது. நடமாடுவது கஷ்டமாகிவிட்டது. ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் ஆலோசனை வழங்கிய போது இவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக துஆ செய்தார்கள். மிகவும் மனமுருகி, உருக்கத்துடன், வேதனையுடன் துஆ செய்து வந்தார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: 'ஓர் இரவில் நான் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் வருகை தருவதைக் கண்டேன். பெஹஷ்தி மக்பராவின் சில மூலிகைகளை உண்ணச் செய்தார்கள். அதற்கு பிறகு கால் மூட்டுகளில் இருந்த வலி கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துவிட்டது.' தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப இவர்கள் மீண்டும் தொழுவதற்காக முறையாக மஸ்ஜித் அக்ஸா மற்றும் மஸ்ஜித் முபாரக் வந்து போக ஆரம்பித்து விட்டார்கள். கிலாஃபத்துடன் அளவற்ற தொடர்பும் நேசமும் இருந்தது. விளையாட்டுகளின் மீதும் ஆர்வம் இருந்தது. ஆகவே இளைஞர்களுடனும் இவர்களுக்கு குறிப்பான தொடர்பு இருந்தது. இளைஞர்களை உற்சாகப்படுத்துவதற்காக விளையாட்டு மைதானங்களுக்கு சென்று வருவார்கள். இந்த வகையிலும் பிள்ளைகளுக்கு தர்பிய்யத் நடைபெற்றது.

நாடு பிரிக்கப்பட்ட போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப 313 தர்வேஷ்கள் காதியானிகள் குடியிருந்தார்கள். அந்த தர்வேஷ்களில் இறுதியாக வஃபாத் ஆனது இவர்கள் ஆவார்கள். இப்பொழுது காதியானில் எந்த தர்வேஷும் கிடையாது. காதியானுடைய இந்த மாநாடு எந்த ஒரு தர்வேஷும் இல்லாமல் நடக்கின்ற முதல் மாநாடு ஆகும். இன்றிலிருந்து மாநாடு ஆரம்பிக்கின்றது. இப்போது காதியானில் இருக்கக்கூடிய புதிய தலைமுறையினரின் பொறுப்பு என்னவென்றால், தியாகங்கள் செய்து வந்த தமது சான்றோர்களின் மரபுகளை நிலைநாட்டியவாறு நன்றி உணர்வோடும், கலப்பற்ற தன்மையோடும் காதியானில் தமது வாழ்வை கழிக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு, **மிர்ஸா முஹம்மது தீன் நாஸ் சாஹிப் (சத்ர், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ரப்வா பாகிஸ்தான்) அவர்களுடையதாகும்.** மூன்றாவது நற்குறிப்பு, **மதிப்பிற்குரிய அக்முறான் ஹைகிஃப்** (Akmuran Haikif) **சாஹிப் உடையதாகும்.** இவர்கள் Turkmenistan இன் நேஷனல் சத்ராக இருந்துள்ளார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இம்மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து இவர்களின் பாவமன்னிப்பு மற்றும் அந்தஸ்து உயர்வுக்காக துஆ செய்தவாறு இவர்களின் ஜனாஸா தொழுகை பற்றி அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)